விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 005 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 09 சனிக்கிழமை (24.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## நிலங்கள் விடுவிக்கப்படாதவரை பேச்சுவார்த்தை அர்த்தமற்றது

### செல்வம் அடைக்கலநாதன்



(மன்னார்)
ஜனாதிபதியால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை, இந்தியாவின் அனுசரணையிலும் உலக நாடுகளின் மேற்பார்வையிலும் நடைபெற வேண்டும் என வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் 11

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை மார்கழிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த துறையும் தென்னாடு செந் தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்தும் மார்கழிப் பெருவிழா நாளை 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

காலை, மாலை என இரு அரங்குகளாக இடம்பெறவுள்ள இவ்விழாவில் காலை அரங்கு 8.30 மணி முதல் 12.30 மணிவரையும் மாலை அரங்கு 1.30 மணி முதல் 5.30 மணி வரையும் இடம்பெறும். (4-7)

## பேருந்து மோதியதில் வயோதிபர் பலி

(கரணவாய்)
துவிச்சக்கரவண்டியில் பயணித்த வயோதிபர் ஒருவர் பேருந்து மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசையா பாலகிருஷ்ணன் (வயது - 65) 11

## 16 தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கைத் துரிதமாக முன்னெடுக்க பரிந்துரை

### நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)
16 தமிழ் அரசியல் சிறைக்கைதிகள் தொடர்பான வழக்குகளை உடனடியாக விசாரணைக்கு எடுத்து அவற்றை விரைவாக நிறைவு செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளேன் என நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாணத்தில் பெருமளவான போதைப்பொருள் மீட்பு

### 47 பேர் கைது

(கொழும்பு)
மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சோதனை நடவடிக்கையின்போது, பெருந்தொகையான போதைப்பொருட்கள் 11

## சதொசவில் 7 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)
கிறிஸ்துமஸ்பண்டிகையை முன்னிட்டு லங்கா சதொச வில், 7 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 220 ரூபாயாகவும் ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலை 285 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம்பெரிய வெங்காயத்தின் விலை 185 ரூபாயாகவும் ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பின் விலை 374 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

425 கிராம் உள்நாட்டு ரின் மீன் ஒன்றின் விலை 475 ரூபாயாகவும், மிளகாய்த்தூள் கிலோகிராம் ஒன்றின் விலை ஆயிரத்து 780 ரூபாயாகவும் ஒரு கிலோகிராம் தாய் நெத்தலியின் விலை ஆயிரத்து 100 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (4-7)

## அம்புலன்ஸுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

(முறிகண்டி)
நோயாளரை ஏற்றி பயணித்த நோயாளர் காவு வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று மாலை மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் கிளிநொச்சி கன 11

## ஆடு மேய்க்கச் சென்றவர் நீரில் மூழ்கி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் - வாதரவத்தை பகுதியில் ஆடு மேய்க்கச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஆடு மேய்ப்பதற்காக சென்றிருந்த வாதரவத்தை - பெரிய பொக்கணை பகுதியைச் சேர்ந்த செ.ராகுலன் (வயது 25) என்ற இளைஞன் நேற்று காலை ஆகியும் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் இளைஞனின் தந்தை இளைஞனை தேடிச் 11

## ஒரு கிலோ கேக்கின் விலை ரூ.1,500

(கொழும்பு)
பண்டிகைக் காலத்தில் ஒரு கிலோ கேக்கின் விலை 1,500ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ள 11

## முல்லையில் வர்த்தகர் கழுத்து நெரித்துக் கொலை

(கொழும்பு)
முல்லைத்தீவு - முள்ளியவளை நீராவிப்பிட்டி பகுதியில் சிறுவியாபார வணிக நிலையம் நடத்திவந்த வர்த்தகர் ஒருவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட மருத்துவமனை சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் குறித்த வர்த்தகர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முள்ளியவளை நீராவிப் பிட்டிப் பகுதியில் வணிக நிலையம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடு பண் பாடு

எம்மவரின் பாடல் திறமையினை
அடையாளப்படுத்த
யாழ் திரைப்பட கல்லூரி,
யாழ் எழில் இணைய வானொலி,
மற்றும்
ஸ்வஸ்திக் நுண்கலை கல்லூரி
இணைந்து நடாத்தும்
பாடல் போட்டி

போட்டியில் கலந்து கொண்டு
வெற்றியாளராகி நீங்களும்
பணப்பரிசில்களை வெல்லுங்கள்...

உங்களை கொண்டாட நாங்கள் தயார்
உங்கள் திறமையை நிரூபிக்க நீங்கள் தயாரா?
உங்கள் காணொளிகளை
அனுப்ப வேண்டிய இறுதி திகதி
2022 December 28

நடுவர்களின் தீர்ப்பே இறுதி...

மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள எமது
யாழ் எழில் இணைய வானொலியுடன் இணைந்திருங்கள்.

(C-5598)

தொடர்புகளுக்கு
whatsapp இலக்கம் 0763166060
yaalezhilradio@gmail.com



மாபெரும் மலிவு விற்பனை

ஏசியன் தளபாட நிலையத்தின்
வருட இறுதி மாபெரும்
மலிவு விற்பனை
இன்றே நாடுங்கள்
அனைத்து பொருட்களிற்கும்
விசேட விலைக் கழிவு
Sofa 3+1+1 = 78,900/=
Sofa 3+2+1 = 99,900/=



(13891)

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 358 3879, 076821 9416



காணி விற்பனைக்கு

சுன்னாகத்திலிருந்து புன்னாலைக்
கட்டுவன் செல்லும் வீதியில் லங்கா
பாம் விதியில் முருகன் கோயிலுக்கு
அருகாமையில் 2 பரப்புடன்கூடிய
காணியும் 42 அடி நீளம் 32 அடி
அகலமுடைய சகல வசதியுடன் கூடிய
வீடும் விற்பனைக்கு உண்டு.

(13892)

076 871 2687



வேலையாள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு
தும்புமுட்டாஸ் உற்பத்தி செய்பவர் உடனடியாக
வேலைக்கு தேவை. கீழ்வரும் தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(C-5597)

076 084 0859


# மீன்களின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

பேலியகொடை மத்திய மீன் சந்தையில் மீன்களின் விலை குறைவடைந்துள்ளது.

போதுமான அளவு மீன் கிடைக்கப்பெறுவதாக பேலியகொடை மத்திய மீன் சந்தை மொத்த வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.

தற்சமயம் மீண்டும் பெருமளவிலான நுகர்வோர் பேலியகொடை மத்திய மீன் சந்தைக்கு பிரவேசிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் தலபத் மீன் கிலோவொன்று மூவாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன் கடந்த மாதத்திற்கு முன்னர் 600 முதல் 700 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சாலை மீன் கிலோவொன்று தற்சமயம் 350 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.


லின்னா மற்றும் பல மீன் கிலோவொன்று 800 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக பேலிய கொடை மத்திய மீன் சந்தை மொத்த வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.(4,7)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

நன்றி மறவோம் என்றென்றும்

அமரர்

## தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்)



மலர்வு
2000.10.13

உதிர்வு
2017.12.24

2017.12.24 அன்று அகால மரணமடைந்த தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்) அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இவரின் பிரிவுத்துயர் கேட்டு (24.12.2017) சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகைதந்த பொதுமக்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், வைத்திய அதிகாரிகள், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது பண்டிகைக்கால கொண்டாட்டங்களைத் தவிர்த்து எம் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்தினர், பொதுமக்கள், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள், முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், புதுக்குடியிருப்பு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாதைகள் அச்சிட்டவர்கள்,வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், உணவு தந்து உதவிய உறவுகள், நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தையும் தாங்களே செவ்வனே செய்து முடித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

6ஆம் வட்டாரம், சிவநகர்,
புதுக்குடியிருப்பு.

077 276 8570
076 971 1453

தனிஸ்ரன் பல்பொருள் வாணிபம்,
முல்லைவீதி, புதுக்குடியிருப்பு.

(C-5594)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தேர்தலை பிற்போடுமாறு அரசாங்கம் கடும் அழுத்தம்

## நாலக கொடஹேவா

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு அரசாங்கம், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடும் அழுத்தம் பிரயோகித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய நிலைமைக்கு அமைய தேர்தலை பிற்போட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடைமுறைச் சட்டத்திற்கு அமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தலை பிற்போட வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது என நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தலை பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவிற்கும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை உள்ளது.

ஏனெனில் இரு தரப்பினரும் மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். தேர்தல் விடயத்தில் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும் எனவும் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார். (ஙி)

# மரக்கறிகளால் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான நத்தார் மரம்



(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் சுமார் 30 அடி உயரமான நத்தார் மரம் மரக்கறி வகைகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் வீட்டுத் தோட்டம் மற்றும் விவசாயச் செய்கையை பிரபல்யப்படுத்தும் நோக்கில இந்த நத்தார்மரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நத்தார் மரத்தில் சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட காய்கறி செடிகளைக் கொண்ட தொட்டிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மரக்கறி வகைகள், கீரை வகைகள், மிளகாய் உள்ளிட்ட பல வர்ண தாவரங்களினால் இந்த நத்தார் மரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த நத்தார் மரம் காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் இந்த மரக்கறிச் செடிகள் மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஙி)

# 100 இற்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு நாட்டில் பாரிய தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

100 இற்கும் மேற்பட்ட மருந்து வகைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொடுப்பனவுகள் தாமதமாக வழங்கப்படுகின்றமை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், முடிந்த வரை தேவைக்கு ஏற்ப மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஙி)


தென்னாடு

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத்துறையும்**
**தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும்**
**இணைந்து நடாத்தும்**

**மார்கழிப் பெருவிழா - 2022**

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

**மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழி பாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. **மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள்** (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- வாழ்த்துரை - பேராசிரியர். **சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ். பல்கலைக்கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே"**
  வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே. பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு
  **அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்**
**(1.30 மணி முதல் 5.30 மணி வரை)**

- அருள் உரை - தவத்திரு. **அகத்தியர் அடிகளார்** (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)
- வாழ்த்துரை - சிவத்திரு. **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்"**
  வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு.**எம்.கே.பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. **வைராக் சசிராக்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 221 2739 / 070 770 1111**

(C-5580)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணியில் மீண்டும் ஜோப்ரா ஆர்ச்சர்

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர். அந்த அணி 50 ஓவர் உலக கோப்பையை வென்ற போது அணியில் இடம் பெற்றிருந்தார்.

அதன் பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக கிரிக்கெட்டில் இருந்து சிறிது காலம் ஒதுங்கி இருந்தார்.

அவரை 2022 ஆம் ஆண்டு ஐ.பி.எல் ஏலத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி எடுத்தது. ஆனால் அவர் காயம் காரணமாக 2022 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரை ஆடவில்லை. அது மட்டுமில்லாமல் கடந்த இரு இருபது-20 உலக கோப்பை தொடர்களையும் அவர் விளையாடவில்லை.



இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்டு வந்துள்ள ஆர்ச்சர் அடுத்த ஆண்டு நடைபெறும் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ளார்.

இந்நிலையில் அவர் மீண்டும் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்தமை தொடர்பாக மும்பை அணி டுவிட்டர் பதிவில், மீண்டும் இங்கிலாந்து அணியில் ஜோப் என தங்களது மகிழ்ச்சியை பதிவிட்டுள்ளனர். (6)




அரச திணைக்களங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி சிறைச்சாலை திணைக்களத்திற்காக அதிக பதக்கங்களை பெற்று வெற்றி பெற்றவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களால் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# உமேஷ் யாதவ், அஷ்வின் அபார பந்து வீச்சு

இந்திய, வங்கதேசம் இரு அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் காலை மிர்பூரில் தொடங்கியது. காயத்தால் முதல் டெஸ்டில் விளையாடாத இந்திய கப்டன் ரோகித் சர்மா இந்த டெஸ்டிலும் விளையாடவில்லை. கப்டன் பொறுப்பை லோகேஷ் ராகுல் ஏற்றார்.

டாஸ் ஜெயித்த பங்களாதேஷ் அணி கப்டன் ஷகீப்-அல்-ஹசன் பட்டிங்கை தேர்வு செய்தார். பங்களாதேஷத்தின் தொடக்க வீரர்களாக ஜாகீர் ஹசன், நஜ்முல் ஹொசைன் களம் இறங்கினர்.

15 ஆவது ஓவரில் பங்களாதேஷத்தின் முதல் விக்கெட் விழுந்தது. ஜெய்தேவ் உனத்கட் பந்தில் லோகேஷ் ராகுலிடம் கட்ச் கொடுத்து அவுட்டானார்.

அடுத்து வந்த கப்டன் ஷகீப்-அல்-ஹசன், 16 ரன்களில் ஆட்டமிழந்த நிலையில், மொமினுல் ஹக் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஸ்கோரை உயர்த்தினார். அதே சமயம் மறுமுனையில் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன.

பங்களாதேஷ அணி 227 ரன்களில் ஓல் அவுட் ஆனது. இந்தியா தரப்பில் உமேஷ் யாதவ், அஷ்வின் தலா 4 விக்கெட்டைகைப்பற்றி அசத்தினர். ஜெய்தேவ் உனத்கட் 2 விக்கெட் எடுத்தார். இதையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா. ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 19 ரன்கள் சேர்த்துள்ளது. (6)

# மார்கழி மாத இராசி பலன்கள் 16.12.2022-14.01.2023

## துலாம்

**கவர்ச்சியாகப் பேசி காரியங்களைச் சாதிக்கும் துலாம் இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். அதே நேரம் செவ்வாய் அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகளும் அதிக விரயங்களும் ஏற்படலாம். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமும் இருப்பதால் எதையும் யோசித்துச் செய்வது நல்லது. பணிகள் பாதியிலேயே நிற்கும் நிலை உருவாகும்.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 9. 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன். மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். பாக்கிய ஸ்தானாதிபதி வலிமை இழப்பது அவ்வளவு நல்லதல்ல. உற்றார். உறவினர்களின் பகை உருவாகும். ஊர் மாற்றம். பூர்வீகச் சொத்து சம்பந்தமான பஞ்சாயத்துக்கள் திருப்திகரமாக அமையாது. தொழிலில் கூட்டாளிகள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்ள மாட்டார்கள். வாகனப் பழுதுகளால் வாட்டமும் வளர்ச்சியில் தளர்ச்சியும் ஏற்படும். வர்த்தகம் சார்ந்த துறைகளில் நீங்கள் செய்த முயற்சிகளில் குறுக்கீடுகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பணப் பொறுப்பில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுங்கள்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கும். 8 ஆம் இடத்திற்கும் அதிப்தியான சுக்கிரன். மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்திற்கு வரும் சுக்கிரனால் ஒரு சில நல்ல வாய்ப்புகள் வரலாம். சுக ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலை மோதும். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் கைநழுவிச் சென்றாலும் வேறு வழியில் ஆதாயம் கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். பெண் பிள்ளைகளின் கல்யாண சீர்வரிசைப் பொருட்களை வாங்குவீர்கள்.

**புதன் வக்கிர நிவர்த்தி.**

மார்கழி 24 ஆம் திகதி. தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவதால் விரயங்கள் கூடும். வீடு மாற்றம். நாடு மாற்றம். உத்தியோக மாற்றம் போன்றவை உங்கள் தகுதிக்கும் தன்மைக்கும் ஏற்ப நடைபெறும். அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறையும். பெற்றோரின் மணிவிழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். உறவினர்கள் பகை மறந்து செயற்படுவர். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து ம்கிழ்வீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவது பற்றி சிந்திப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் அகலும். கேட்ட சலுகைகளும் கிடைக்கும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 29 ஆம் திகதி. ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு தன ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய்;, களத்திர ஸ்தானத்திற்கும் அதிபதியாகிறார். எனவே பொருளாதாரப் பிரச்சினை அகலும். அருளாளர்களும் அனுபவஸ்தர்களும் சொல்லும் ஆலோசனைகள் அவ்வப்போது கைகொடுக்கும். பற்றாக்குறை நீங்கி பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். அதே நேரத்தில் செவ்வாய் 8 இல் சஞ்சரிப்பதால் வீண் விரயங்கள் ஏற்படும். சொத்துக்களை விற்க வேண்டிய நிலை உருவாகும். சப்தமாதிபதியாக செவ்வாய் விளங்குவதால் கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். "வாழ்க்கைத்துணைக்கு வேலை கிடைக்கவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு. அந்த நிலை மாறும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். வெளிநாட்டுப் பயணம் கைகூடும். அதன் மூலமாக ஆதாயம் தரும் தகவலும் வந்து சேரும். இடம் வாங்குவது. கட்டம் கட்டு வது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும். இம்மாதம் வராஹி வழிபாடு வளர்ச்சியைத் தரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமும் ஆறாமிடத்தில் குருவும் எட்டாமிடத்தில் செவ்வாயும் இருப்பதால் எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். இடர்பாடு அதிகரிக்கும். உறவினர் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன் - மனைவிக்குள் இணக்கம் ஏற்பட அனுசரித்துச் செல்வது நல்லது. தாய்வழி ஆதரவு உண்டு. பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். பணிபுரியும் பெண்கள் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள்.

## விருச்சிகம்

**தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியைப் பார்க்கிறார். பலம் பெற்று சஞ்சரிக்கும் குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 8. 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன். மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். அஷ்டமாதிபதியான புதன் வக்கிரம் பெறுவது நன்மைதான். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். இலாபாதிபதியாகவும் புதன் விளங்குவதால். அதன் வக்கிர காலத்தில் பணவரவு தாமதப்பட்டாலும் திடீர் திடீரெனப் பெருந்தொகைகள் வந்து மகிழ்ச்சியைத் தரும். தொழில் வர்த்தகத் துறையில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ற விதத்தில் சம்பளமும் கிடைக்கலாம். இலாகா மாற்றங்கள் இனிமை தரும்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7. 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன். மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். களத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன். சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத்துணை வழியே நல்ல தகவல்கள் கிடைக்கும். குறிப்பாக அவர்கள் உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால் அது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். அனுகூலமான விரயங்கள் உண்டு. அரைகுறையாக நின்ற காரியங்கள் செவ்வனே முடியும். நண்பர்கள் வழியில் மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து கடமையை முடித்துக் கொடுப்பர். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகம். தொழில் ரீதியான அழைப்புகள் வரலாம்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 24 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவதால். யோகங்கள் படிப்படியாக வந்து சேரும். குறிப்பாக இலாபாதிபதி பலம்பெறும் போது. தொழிலில் இலாபம் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகளும் சம்பள உயர்வும் கிடைக்கலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வர்த்தகம் சார்ந்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 29 ஆம் திகதி. ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கும் 6 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குபவர் செவ்வாய். உங்கள் இராசிநாதன் வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான். ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும். தொழில் வளம் பெருகும். கிளைத் தொழில்கள் தொடங்க. கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். 6 இற்கு அதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் அதன் வக்கிர நிவர்த்தி காலத்தில் பணியில் இருப்பவர்களுக்கு பணியிட மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லுங்கள். தங்கள் முன்னேற்றத்தை சக பணியாளர்களிடம் சொல்ல வேண்டாம். செவ்வாய் பார்வை உங்கள் இராசியின் மீது பதிவதால் துணிந்து சில முடிவுகளை எடுத்து துயரங்களை வெளியேற்றிக் கொள்வீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை திருப்திகரமாகவே இருக்கும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்யும் கூட்டுமுயற்சியில் வெற்றி கிடைக்கும். இம்மாதம் நடராஜப் பெருமான் வழிபாடு நலம் யாவும் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குருவின் பார்வையால் குடும்பத்தில் முன்னேற்றம் கூடும். மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உண்டு. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அன்பும் ஆதரவும் கூடும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவும் உடன்பிறப்புகளின் உதவியும் திருப்தி தரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வரலாம். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

ஊரின தென்னம்பிள்ளைகள், அன்னமுன்னா பழமரக்கன்றுகள், தவசி முருங்கை மரக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**076 698 2219** (சி-5592)


## மின் கட்டண உயர்வை எதிர்த்து கொழும்பில் போராட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கொழும்பு-கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அனைத்து தொழிற்சங்க தலைவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்ததுடன், மின் கட்டண் அதிரிப்பை எதிர்த்து பொதுமக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (நி)

## பதவியை இராஜினாமா செய்த ஆலோசகர் ஆஷுமாரசிங்க

(கொழும்பு)

பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆஷுமாரசிங்க உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதேவேளை தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி)

## யாழ்ப்பாணம்-காரைக்கால் படகுச் சேவை காலதாமதம் ஆகும்-இந்திய துறைமுக செயலர்

(கொழும்பு)

காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு படகு சேவை அடுத்த மாதம் தொடங்காது. சோதனை நிலையப் பணிகள் நடப்பதால் இரு மாதங்களாகும் என இந்தியத் துறைமுகத்துறை செயலர் ஜவகர் தெரிவித்தார்.

காரைக்கால் - யாழ்ப்பாணம் பயணியர் படகு சேவை அடுத்த மாதம் தொடங்கப்படவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்திருந்தது. இதற்கு இந்திய அரசின் ஒப்புதலும் தரப்பட்டுள்ளது.

வரும் ஜனவரியில் படகு போக்குவரத்து தொடங்க வாய்ப்புள்ளதா என்று துறைமுகத் துறை செயலர் ஜவகரிடம் கேட்டதற்கு, படகுச் சேவையை ஜனவரியில் தொடங்குவது கடினம். தற்போதைய பணிகள் நிறைவடைய இரு மாதங்களாகும். அதன் பிறகு படகு போக்குவரத்து திகதி இறுதி செய்யப்படும். வர்த்தகம் மட்டுமில்லாமல் சுற்றுலாவுக்கும் உகந்ததாக இச்சேவை இருக்கும். குறிப்பாக காரைக்கால் திருநள்ளாறு கோயில் உள்ளிட்ட ஆன்மிக சுற்றுலாவும் நன்கு வளர்ச்சி அடையும்" என்று குறிப்பிட்டார். (நி)

## ஜனாதிபதி ரணில் மீது ஆளுந்தரப்பினர் சிலர் அதிருப்தி

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் பின்னர் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் எனவும், ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுக்கள் வழங்கப்படும் எனவும் அரச மேல்மட்டத்தில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நியமனம் காலவரையறையின்றி தாமதப்படுத்தப்பட்டுள்ளது. ஆளும் கட்சியான ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு சில விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்படாததை அடுத்தே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆளுந்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக பிரதமர் பதவியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என பொதுஜன முன்னணியின் ஒரு தரப்பு வலியுறுத்திய போதிலும் அதில் மாற்றங் களை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இது குறித்து பசில் ராஜபக்ஷவிடம் ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கவலைகளை முன்வைத்த போதிலும், புதிய அமைச்சர்களை நியமிப்பது ஜனாதிபதியிடம் தான் உள்ளது என அவர் வெளிப்படையாகவே தெரிவித்து விட்டார். இதனை அடுத்து ஆளுந்தரப்புக்குள் சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (நி)


# பால், பால் பொருட்கள் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.01.2023 ஆம் திகதியிலிருந்து பால், பால் பொருட்களின் விலையை பின்வருமாறு நிர்ணயம் செய்துள்ளது என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

| | விபரம் | விற்பனை விலை | | விபரம் | விற்பனை விலை |
|---|---|---|---|---|---|
| 1. | பால் ஒரு லீற்றர் | 220.00 | 11. | fat பனீர் -1/4 கிலோ | 600.00 |
| 2. | தயிர் ஒரு லீற்றர் | 260.00 | 12. | Non fat பனீர் 01 கிலோ | 2200.00 |
| 3. | பதனிடப்பட்ட பால் 500 மி.லீ | 180.00 | 13. | Non fat பனீர் 1/4 கிலோ | 550.00 |
| 4. | யோக்கட் 80 கிராம் | 80.00 | 14. | கப் தயிர் 500 மி.லீ | 220.00 |
| 5. | ஐஸ்கிறீம் 80 கிராம் | 80.00 | 15. | கப் தயிர் 250 மி.லீ | 110.00 |
| 6. | சுவைப்பால் 200 மி.லீ | 80.00 | 16. | நெய் 750 மி.லீ | 3200.00 |
| 7. | மில்க்லொலி 70 மி.லீ | 20.00 | 17. | நெய் 375 மி.லீ | 1600.00 |
| 8. | மில்க்ரொபி 150 கிராம் | 400.00 | 18. | நெய் 187.5 மி.லீ | 800.00 |
| 9. | சுடுபால் ஒரு கப் | 80.00 | 19. | சர்பத் 1 லீற்றர் | 400.00 |
| 10. | fat பனீர் 01 கிலோ | 2400.00 | | | |

சுத்தமான பசும்பாலிலிருந்து சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட யாழ்கோ உற்பத்திப் பொருட்களை எமது சங்கக்கிளை நிலையங்களிலும் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பால்பொருள் விற்பனை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்** (சி-5590)
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**021 321 2926**


# 31ம் நாள் இதய அஞ்சலி



அமரர்.

## வேலுப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(முன்னாள் தலைவர் கச்சாய் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்)

"காலத்தால் அழியாத அஜந்தா ஓவியமே"

(3887)

**உன்னுடன் என்றும்**
**நண்பர் குழாம் வினோபா நூலகம்,**
**வினோபா நகர், கச்சாய்.**

# இராசிபலன்

**24.12.2022**
**மார்கழி 09, சனிக்கிழமை**
**பிரதமை பிற்பகல் 2.21 மணிவரை**

**பூராடம் பின்னிரவு 1.17 மணிவரை**
**சுபநேரம் -3.26-4.56 மணிவரை**
**இராகுகாலம் -9.26-10.56 மணிவரை**

**சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்**

**வளவன்**



மேஷம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.



கடகம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், போசன சுகமுண்டு.



துலாம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.



மகரம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணும் நாள், சயன சுகக் குறைவான நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.



ரிஷபம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.



சிம்மம்

பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம்.



விருச்சிகம்

குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



கும்பம்

பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு.



மிதுனம்

பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.



கன்னி

பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



தனுசு

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், கற்பனை மிகுதியாக நாள்.



மீனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாய் இரு, விரும்பியதை அடைவாய்.

# இந்தியத்துணைத்தூதருடன் அங்கஜன் எம்.பி சந்திப்பு



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இல. 80 A கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள அங்கஜன் இராமநாதனின் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் தற்கால பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்த அங்கஜன் இராமநாதன் இந்திய அரசு எமது மக்களுக்கு ஆற்றிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் நாட்டின் வறுமை மிகுந்த மாவட்டங்களில் யாழ். மாவட்டமும் உள்ளடங்கியிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், எமது மாவட்ட மக்களுக்கான தேவைகள் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் மேலும் அதிகரித்துள்ளதாகவும் இந்திய துணைத் தூதரிடம் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-6-30-33-104)

## மந்திகை மருத்துவமனைக்கு

# சுமார் ஆறு இலட்சம் பெறுமதியான மருந்துப்பொருட்கள் வழங்கி வைப்பு




(கரணவாய்)

நாட்டில் மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு அறம் அறக்கட்டளை அமைப்பினால் மந்திகை ஆதார மருத்துவமனைக்கு ஐந்து இலட்சத்து எண்பதாயிரத்து நூற்றுமுப்பத்தாறு ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் நேற்று முன்தினம் அறம் அறக்கட்டளை அமைப்பின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் க.பிரதீபனால் மருத்துவமனையின் பொறுப்பு அதிகாரி மருத்துவர் ம.தயாளினியிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நெல்லியடி வர்த்தக சங்க செயலாளர் சுரேரஞ்சன் மற்றும் மருத்துவ சாலையின் நிர்வாக உத்தியோகத்தர் கலந்து கொண்டனர். (நி-6-60)

# கணபதி ஹோம பயிற்சி நெறி அரங்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றிய குருகுலம் வழங்கும் இந்துக்குருமார்களுக்கும் மாணவர்களுக்குமான "கணபதி ஹோம பயிற்சி நெறி அரங்கம்" நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை ஊரெழு மேற்கு மீனாட்சி அம்மன் கோயில் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (6)

# பூட்டு பிணைச்சல் திருட்டு

(கரணவாய்)

பொலிகண்டி களிகொட்டன் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதிய வீட்டுக்காக வாங்கப்பட்ட ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பூட்டு பிணைச்சல் களவாடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6)

# உலர் உணவுப்பொதி வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு வடமாகாண இலங்கை வங்கி ஓய்வூதிய சங்கத்தினரால் மண்டைதீவில் உள்ள 3 கிராம உத்தியோகத்தர் பிரிவினூடாக விசேட தேவையுடையோருக்கான உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்கிழமை அச்சங்கத்தின் தலைவர் ரி.செந்திநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் ஓய்வுநிலை அதிகாரி கே.கே.விக்னேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த உலர் உணவுப் பொதி வழங்கப்பட்டது. (6)

# பரிசில் வழங்கலும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

காலையடி பண்டத்தரிப்பில் இயங்கிவரும் மறுமலர்ச்சி மன்ற பொன்விழாவையொட்டி உலகளவில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கான பணப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் சிறந்த சிறுகதைகளை உள்ளடக்கிய மறுமலர்ச்சி சிறுகதைத் தொகுதியின் வெளியீடும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவரும் வலிகாமம் மற்றும் தீவக கல்வி வலயங்களின் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான சு.சுந்தரசிவத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6)

# வல்வை பகுதியில் திருடப்பட்ட மின்விளக்குகள் மீட்பு

(அராலி)

யாழ்ப்பாணம் - வல்வை பகுதியில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பகுதியில் பொது மக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்ட இரு சோளர் மின் விளக்குகள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் களவாடப்பட்டிருந்தன.

அந்தவகையில் மின் விளக்குகளின் சில பாகங்கள் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பிரதேச சபையினால் நேற்று மீட்கப்பட்டுள்ளன. (நி-6-104)

# வீதியில் தவறவிட்ட பணப்பையை உரிமையாளரிடம் கையளித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

வீதியில் கண்டெடுக்கப் பட்ட பணப்பையை, அதன் உரிமையாளரிடம் கையளித்த யாழ்ப்பாணம் ஊர் காவற்றுறை பொலிஸாரின் செயலுக்கு பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி விதானபத்திரன உள்ளிட்ட, பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது வீதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இருந்த பையினை பரிசோதித்த போது, அதனுள் 35 ஆயிரம் ரூபாய் பணம், தங்க ஆபரணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் சில காணப்பட்டன.

ஆவணங்களின் அடிப்படையில், குறித்த பையானது, ஊர்காவற்றுறை பகுதியில் வசிக்கும் கிறிஸ்தவ மதகுரு ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டது.

அதனை அடுத்து, அது தொடர்பில் மதகுருவுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்திற்கு மதகுருவை அழைத்து, அதனை அவரிடம் பொலிஸ் பொறுப்பதிகாரி கையளித்தார். (6-33-104)



யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் அனுசரணையுடன் அமரர்.டெய்சி பற்றிமா மனோகரனின் நினைவு தினத்தை முன்னிட்டு பத்து பேருக்கு சக்கர நாற்காலி, ஊன்றுகோல், உதவித்தொகை என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.



யாழ்.பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11:30 மணிக்கு கற்கை நெறியின் இணைப்பாளர் அருட்தந்தை பேராசிரியர் ஜே.சி.போல் றொகானின் நெறிப்படுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனை தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு முன்னெடுப்பு

(அராலி)

நாடு பூராவும் பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனை தொடர்பிலான விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் பொலிஸ் மா அதிபரின் விசேட பணிப்புரைக்கமைய சிறுவர் மகளிர் துஷ்பிரயோகத்தடுப்புப் பணியகத்தினரின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனை தொடர்பிலான விழிப்புணர்வு செயற்றிட்டம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர் மகளிர் துஷ்பிரயோகத்தடுப்புப் பணியகத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தீபானி மெனிகே, யாழ். பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட 10 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (நி-6-104)

# நாடு வங்குரோத்து நிலையை அடைய அரசியல்வாதிகளே முழுக்காரணம்

## –சரத் பொன்சேகா தெரிவிப்பு–



(கொழும்பு)

"வங்குரோத்து அடைந்துள்ள எமது நாட்டை இந்த அரசால் மீட்டெடுக்க முடியாது. இந்த அரசு ஆட்சியில் இருக்கும் வரைக்கும் நாட்டுக்கு மீட்சி இல்லை." என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில்,

"எமது நாடு வங்குரோத்து அடைந்த நாடு என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளிடம் பெற்றுள்ள கடனை மீளச் செலுத்திக் கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலைமை தற்போது உருவாகியுள்ளது. இதனால் நாட்டு மக்களால் வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வாழ்வாதார செலவீனம் அதிகரித்து மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

தொழில் வாய்ப்பற்ற நிலைமைகள் உருவாகியுள்ளன. தொழிற்றுறைகள் செயலிழந்துள்ளன.

மந்தபோசனையால் ஒரு இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கு 50 வீதமானோர் மூன்று வேளைகளும் உணவு உட்கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் வறுமை நிலைமை அதிகரித்துள்ளது. பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்குத் தேவையான கொப்பிகள், புத்தகங்களை வாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு மக்களிடம் போதிய பணம் இல்லை. நாட்டில் சகல துறைகளும் செயலிழந்து காணப்படுகின்றன.

நாடு இன்று வங்குரோத்து அடைந்தமைக்கு அரசியல்வாதிகளே பொறுப்புக்கூற வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஞ)

# சீனாவில் பரவும் புதிய ஒமிக்ரோன்

## இலங்கையிலும் பரவும் அபாயம்

(கொழும்பு)

**புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகள் சீனாவில் வேகமெடுக்கின்றன. இதன் காரணத்தால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

சீனாவில் பரவி வரும் புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகளினால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனுடன் எதிர்காலத்தில் மீண்டும் முகக்கவச பாவனையை கட்டாயமாக்கும் யோசனை ஒன்றும் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், நாட்டிற்கு வரும் வெளிநாட்டினரை மீண்டும் கொரோனா பரிசோதனை செய்ய வேண்டும் என்ற கருத்தும் உள்ளது. இதேவேளை, இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென சுகாதார தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த கொரோனா காலத்தில், இலங்கையில் பதிவாகிய முதலாவது கொரோனா தொற்றுக்குள்ளான நபர் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தவர் எனவும், அந்த அனுபவங்களை இம்முறை நிலைமையை தணிக்க பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞ)

# 28 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இலங்கைக்கு

(கொழும்பு)

யூரியா உரத்தை ஏற்றிச் வந்த கப்பல் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தினை வந்தடைந்ததாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலில் 28 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞ)

# சிகிரியா குன்றில் ஏற 11 ஆயிரம் ரூபா அறவீடு

## அதிர்ச்சியில் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

சிகிரியா குன்றுக்கு ஏறுவதற்கு வெளிநாட்டவர் ஒருவரிடம் இருந்து 11 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுவதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக வெளிநாட்டவர்கள் பலர் சிகிரியா குன்றில் ஏறுவதை தவிர்த்து வருவதாக சிகிரியா பிரதேச சுற்றுலா வழிகாட்டிகள் தெரிவிக்கின்றனர். (ஞ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:சூரி 8 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்:HNDA Hotel Management (முகாமையாளர் தனியார்)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ: B/13213 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: சூரி 11 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc (Applied Accounting)லண்டன்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/13238 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 19½ சூரி 8 செவ் 5 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HND IT முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிவேலை செய்பவர்<br>தொ.இ: B/13214 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 45 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/13239 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 30 சூரி 12 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13215 | பிறப்பு:1997 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: சூரி1 செவ் 3 இல் உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:Pharmacist, Nursing (சுவிஸ்)<br>எதிர்பார்ப்பு: படித்த சுவிஸ்லாந்து வதிவு நிலை உள்ளவர்<br>தொ.இ: G/13241 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 7¼ சூரி 3 செவ் 5 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:A/L கட்டார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13216 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 1<br>கி.பா: சூரி 12 செவ் 10 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: Diploma in IT<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/13245 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்வு

(வோஷிங்டன்)

அமரிக்காவில் நிலவும் குளிரான காலநிலையால். உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்து வருகிறது.

கடந்த வாரம் 79 டொலர்களாக குறைந்திருந்த மசகு எண்ணெய் விலை நேற்று முன்தின நிலவரப்படி 81 டொலரை தாண்டியுள்ளது. (ஞ)

# ஏலக்காய் விலை திடீர் உயர்வு

(கொழும்பு)

தற்போது சந்தையில் ஒரு கிலோ ஏலக்காய் விலை 12,000 ரூபாய் முதல் 14,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

நாட்டில் பயிரிடப்படும் ஏலக்காயின் அளவு குறைந்துள்ளதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ உலர் ஏலக்காயை பதப்படுத்த சுமார் ஆறு கிலோ பச்சை ஏலக்காய் தேவைப்படுவதுடன், சந்தையில் ஒரு கிலோ பச்சை ஏலக்காயின் விலை தற்போது 7000 ரூபாய் முதல் 8000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. மேலும், இந்நாட்டில் வருடாந்தம் சுமார் 30 மெற்றிக் தொன் ஏலக்காய் நுகரப்படுகிறது.

அதனால், உற்பத்தி குறைந்துள்ளதால், ஏலக்காய் உற்பத்திக்கு அதிக கேள்வியும் தேவையும் ஏற்பட்டுள்ளதாக, ஏலக்காய் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஞ)

# தினசரி மின்வெட்டு அதிகரிக்கப்படாது

## மின்சாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

தினசரி மின்வெட்டு எந்த வகையிலும் அதிகரிக்கப்படாது என மின்சார சபை தெரிவித் துள்ளது.

நிலக்கரியைக் பெறுவதில் சிக்கல் நிலை காணப்பட்டாலும் நீண்டகால மின்வெட்டு இன்றி மின்சாரம் வழங்கப்படும் என மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார். இவ்வாறானதொரு நிலையில் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதற்கான மாற்று வழிகள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 58





"உமக்குப் புண்ணியமாய்ப் போகட்டும், நிறுத்தும்!" என்றான்.

"அடடா! தெய்வத் தமிழ்ப் பாசுரத்தை நிறுத்தச் சொல்கிறாயே?"

"ஆழ்வார்க்கடியான் நம்பிகளே! எனக்கு ஒரு சந்தேகம் உதித்திருக்கிறது அதைச் சொல்லட்டுமா?"

"நன்றாய்ச் சொல்லு!"

"தடியைத் தூக்கிக் கொண்டு அடிக்க வரமாட்டீரே?"

"உன்னையா? உன்னை அடிக்க என்னாலே முடியுமா?"

"உம்முடைய வைஷ்ணவம், பக்தி, ஊர்த்தவ புண்டரம், பாசுரப் பாடல்" எல்லாம் வெறும் வேஷம் என்று சந்தேகிக்கிறேன்."

"ஐயையோ! இது என்ன பேச்சு? அபசாரம்! அபசாரம்!"

"அபசாரமும் இல்லை, உபசாரமும் இல்லை. உம்முடைய பெண்ணாசையை மறைப்பதற்காக இந்த மாதிரி வேஷம் போடுகிறீர். உம்மைப் போல் இன்னும் சிலரையும் நான் பார்த்திருக்கிறேன். பெண்ணாசைப் பித்து பிடித்து அலைகிறவர்கள். அப்படி என்னதான் பெண்களிடம் காண்கிறீர்களோ, அதுதான் எனக்குத் தெரியவில்லை. எனக்கு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் வெறுப்பாகவே இருக்கிறது."

"எனக்கு அதெல்லாம் தெரியாது. தம்பி! இராஜாங்க காரியங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நான் வைஷ்ணவன்; ஆழ்வார்களின் அடியார்க்கு அடியான்; எனக்குத் தெரிந்த பாசுரங்களைப் பாடிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறவன்!"

இவ்வாறு ஆழ்வார்க்கடியான் கூறி, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று பாடத் தொடங்கவும், வந்தியத்தேவன் குறுக்கிட்டு,

"தம்பி! பெண் பித்துப் பிடித்து அலைகிறவர்கள் சிலர் உண்டு. ஆனால் அவர்களோடு என்னைச் சேர்க்காதே. நான் வேஷதாரி அல்ல; நீ அவ்விதம் சந்தேகிப்பது ரொம்பத் தவறு."

"அப்படியானால் பல்லக்கில் வந்த அந்தப் பெண்ணிடம் ஓலை கொடுக்கும்படி என்னை ஏன் கேட்டீர்? அதிலும் இன்னொரு மனுஷன் மணம் புரிந்து கொண்ட பெண்ணிடம் மனதைச் செலுத்தலாமா? நீர் கடம்பூர் மாளிகைக்கு வர வேண்டும் என்று சொன்னதும் அவளைப் பார்ப்பதற்குத்தானே? இல்லை என்று சொல்ல வேண்டாம்!"

"இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு நீ கூறிய காரணம் தவறு; வேறு தகுந்த காரணம் இருக்கிறது. அது பெரிய கதை."

"குதிரை இன்னும் வரக்காணோம். அந்தக் கதையைத்தான் சொல்லுங்களேன்! கேட்கலாம்!"

"கதை என்றால், கற்பனைக் கதை அல்ல; உண்மையாக நடந்த கதை. அதிசய வரலாறு! கேட்டால் திகைத்துப் போவாய்! அவசியம் சொல்லத்தான் வேண்டுமா?"

"இஷ்டமிருந்தால் சொல்லுங்கள்!"

"ஆம், சொல்லுகிறேன். கொஞ்சம் எனக்கு அவசரமாய்ப் போக வேண்டும். இருந்தாலும் சொல்லி விட்டுப் போகிறேன். மறுபடியும் உன்னிடம் ஏதாவது உதவி கோரும் படியிருந்தாலும் இருக்கும். அப்போது தட்டாமல் செய்வாய் அல்லவா?"

"நியாயமாயிருந்தால் செய்வேன். உங்களுக்கு இஷ்டமில்லா விட்டால் ஒன்றும் சொல்ல வேண்டாம்."

"இல்லையில்லை! உன்னிடம் கட்டாயம் சொல்லியே தீர வேண்டும். அந்த இரணியாசுரன் பழுவேட்டரையரின் இளம் மனைவி இருக்கிறாள், நான் ஓலை கொண்டு போகச் சொன்னேனே. அவள் பெயர் நந்தினி. அவளுடைய கதையை நீ கேட்டால் ஆச்சரியப் பட்டுப் போவாய். உலகில் இப்படியும் அக்கிரமம் உண்டா என்று பொங்குவாய்!" இந்த முன்னுரையுடன் ஆழ்வார்க்கடியான் நந்தினியைப் பற்றிய கதையை ஆரம்பித்தான்.

ஆழ்வார்க்கடியான் பாண்டிய நாட்டில் வைகை நதிக்கரையில் ஒரு கிராமத்தில் பிறந்தவன். (தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### தோல் இருக்கச் சுளை விழுங்கி

(நேற்றைய தொடர்ச்சி)

என்ன நடந்திருக்கும் என்று அறிவதில் அவர்களுக்குள் ஆர்வம் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தது.

"அந்த உப்புப் பொதிகளின் வாய்ப்பகுதிகளை நன்றாக ஊசியாலே கொஞ்சமும் சந்து இல்லாமல் அழுத்தமாகத் தைத்துத் தான் வைத்திருந்தார்கள்.

ஆனால் தைத்த வாய் தைத்த படியேயிருக்க, பொதிகளில் இருந்த உப்புத் தான் மாயமாய் காணா மல் போயிருந்தது. இந்த ஆறு இருக்கிறதே, இது அவ்வளவு மாய மந்திரம் தெரிந்து வைத்திருக்கிறது! தோல் அப்படியே இருக்க, உள்ளே சுளைகளையெல்லாம் எப்படியோ விழுங்கி விட்டதைப் போல, கோணி வாய் தைத்ததைப் பிரிக்கமலேயே, உள்ளேயிருந்த உப்பு அவ்வளவையும் திருடித் தின்று ஏப்பம் விட்டு விட்டது," என்று வியந்து அப்போதும் பயந்தான் மட்டி, உப்பு போனால் போகிறது. அவர்களை விழுங்காமல் விட்டதே இந்தப் பொல்லாத நதி? விழுங்கியிருந்தால் அவர்கள் கதி?" என்று பயமும் பச்சாதாபமும் கொண்டார் குரு நாதர்.

"உப்பைத் தின்றதனால் அவர்களை விழுங்காமல் விட்டுவிட்டது. அவர்களை விழுங்கியிருந்தால் உப்பை தின்றிருக்காது" என்று தன் ஆராய்ச்சி அறிவால் கண்டு பிடித்துச் சொன்னான் பேதை.

"நானும் அதைத்தான் சொல்ல நினைத்தேன்" என்று ஒத்து ஊதினான் மூடன்.

என் தாத்தாவும் அப்படித்தான் நினைத்தார். அதற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினார். 'கடவுளே... என்ன உப்பைக் கொடுத்து விட்டு என் உயிருக்கு எந்தத் தீங்கும் வராமல் தடுத்து விட்டாயே... உயிர் கொடுத்த உனக்கு [illegible] பூஜை செய்து காணிக்கை செலுத்துகிறேன்' என்று வேண்டிக் கொண்டார். அதற்கப்புறம் அவர் இந்த ஆற்றின் பக்கமே வந்ததில்லையாம்!"



மட்டி சொன்ன அந்த ஆச்சரியமான, பயங்கரமான கதையை கேட்டு அவர்கள் அடைந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு வெகுநேரம் ஆனது. அப்போது அந்தப் பக்கமாக யாரோ குதிரையின் மேல் சவாரி செய்து கொண்டு வருகின்ற சப்தம் அவர்களுக்கு கேட்டது. நன்றாக உற்றுப் பார்த்தார்கள்; காதுகளைத் தீட்டிக் கொண்டு கவனித்தார்கள்.

அந்தக் குதிரை வீரன் கொஞ்சமும் அஞ்சாமல் அந்தக் குதிரையை ஆற்றில் இறக்கி, வேகமாக ஓட்டிக்கொண்டு எந்த ஆபத்துமின்றிக் கரையைக் கடந்து விட்டான்.

இத்தனைக்கும, ஆற்றிலே முழங்கால் அளவுக்கு தண்ணீர் என்னமாய் ஓடிக்கொண்டிருந்தது! குதிரையோடு வேகமாகப் போனவனை ஒன்றும் செய்யவில்லையே...! ஆறு விழித்திருக்கும் போதே அவன் சுலபமாகக் கடந்து போய் விட்டானே! ஒஹோ நம் குருவுக்கும் இப்படி ஒரு குதிரையிருக்குமேயானால், நாம் இப்படியெல்லாம் கரையிலேயே கலங்கித் தவித்துக் கொண்டிருக்க நேருமா?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
- ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கால்நடை வளர்ப்பு வட மாகாணத்தில் படுதோல்வி

கால்நடை வளர்ப்பு வட மாகாணத்தில் படுதோல்வி கண்டுள்ளதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இவ்வாறான தோல்விக்கு வடக்கிலுள்ள கால்நடை அபிவிருத்தி சார்ந்த அரச அமைப்புகளும் கால்நடை வைத்தியசாலைகளுமே மூலகாரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

தவிர, கால்நடை சார்ந்த அமைப்புகளின் சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்வதில் மிகுந்த இடர்பாட்டைச் சந்திக்கின்றனர்.

இதை நாம் கூறும்போது மனச்சாட்சியுடைய - உண்மையாகப் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மனம் நோகவே செய்யும் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

அத்தகைய நேர்மையான உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை வைத்தியர்களுக்கு இது ஒருபோதும் பொருந்தாது என்பதை மனதில் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதேநேரம் தங்களின் கடமையை மிகக் குறைந்தளவேனும் செய்யக்கூடிய அரச கால்நடை அமைப்புகள் வடமாகாணத்தில் இல்லை என்ற உண்மையையும் நாம் நிராகரிக்க முடியாது.

உண்மையில் வட மாகாணத்தில் கால்நடை வைத்தியசாலைகளின் ஆகக்குறைந்த பணி என்பது ஊர்க்கோழிகளுக்கு தடை மருந்து வழங்குவதாக மட்டுமே இருக்கிறது.

அதிலும் ஊர்க்கோழிக்குத் தடை மருந்து கொடுக்க வேண்டும் என்ற தகவல் இதுவரை தெரியாமல் இருப்பவர்கள் அநேகம்.

மாறாக வடமாகாணத்தில் நல்லின நாய்கள் மட்டுமே குறிப்பிட்டு எண்ணக்கூடிய அளவில் வளர்க்கப்படுகின்றன.

அவ்வாறு நல்லின நாய் வளர்ப்பவர்கள் தாங்கள் வளர்க்கின்ற உயர்ரக நாய்களுக்கு சிகிச்சை தேவைப்படும்போது பிறைவேற் கால்நடை வைத்தியசாலைகளை - கால்நடை வைத்தியர்களை நாடுகின்றனர்.

அதாவது உயர்ரக நாய்களை வளர்ப்பவர்கள் கணிசமான பொருளாதார வசதி படைத்தவர்களாக இருப்பதால், அவர்கள் அரச கால்நடை வைத்தியசாலைகளுக்குச் சென்று அவமரியாதைப்படுவதை ஒருபோதும் விரும்புவதில்லை.

அதேநேரம் ஆடு, மாடு, கோழி வளர்ப்பவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாலும் அவர்களின் ஏழ்மையும் நெஞ்சுக்கு நீதியும் சேர்ந்து அவர்களை கடுமையாகத் தாக்கிவிடுகிறது.

ஆம், வடமாகாணத்தில் நல்லினப் பசு வளர்ப்பவர்கள் தங்களின் பசுக்களைத் தெருவில் விட்டுள்ளனர்.

கால்நடைத் தீவனங்கள் கடும் விலையேற்றத்தைச் சந்தித்ததன் காரணமாக நல்லினப் பசுக்களை தெருவுக்கு விடுகின்ற பரிதாப நிலைக்கு நம் கால்நடை வளர்ப்போர் ஆளாகினர்.

இதுதவிர, அண்மையில் வீசிய கடும் காற்று அதிக மழை காரணமாக ஏகப்பட்ட கால்நடைகள் உயிரிழந்துபோயின.

கடும் குளிர் நிலையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றபோதிலும் மழை, வெயில் ஆகிய சீதோசன நிலைகளுக்கு ஏற்றதான கால்நடை வளர்ப்பு முகாமைத்துவம் கால்நட வளர்ப்போருக்கு கிடைத்திருந்தால், குறித்த கால்நடைகளைக் காப்பாற்றியிருக்க முடியும்.

இதோடு நிலைமை முற்றுப் பெறும் என்றால் இப்போது போலி மருத்துவர்களின் ஊடுருவலால் கால்நடைகள் மரணிப்பதான தகவல்கள் வந்தவண்ணமுள்ளன.

என்ன செய்வது கால்நடை வைத்தியசாலைகள் தங்கள் பணியை செய்யத் தவறும்போது போலிகள் ஊடுருவுவதை யாரால் தடுக்க முடியும்.

# யாழ். பல்கலையில் பெரும் வரவேற்பை பெற்றுள்ள சமுதாய சமையலறை திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்மாதிரியான சமுதாய சமையலறைத் திட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை மந்தகதியான நேரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் போதியளவு உணவு வசதியை பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சில விரைவுயாளர்களின் பங்களிப்புடன் ஆரம்பித்த திட்டம் மாணவர்களின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. திங்கள் முதல் வெள்ளி வரை ஏறத்தாழ ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேல் தங்கள் பசியினை ஆறிச்செல்கின்றனர்.

சமையலில் மரக்கறி வெட்டுவதில் இருந்து மாணவர்களுக்கு உணவு பரிமாறுதல், பாத்திரம் கழுவுதல் என அனைத்து விடயங்க்ளிலும் இவ் விரிவுரையாளர்களும் முழுமனதோடு ஈடுபடுவதுடன் மாணவர்களும் விரிவுரை தவிர்ந்த நேரங்களில் தங்களாலான உதவிகளினைச் செய்து வருகின்றனர்.

சில விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ் சமூக சமையலறை உணவுத் திட்டத்திற்கு பல விரிவுரையாளர்கள் கைகோர்க்க ஆரம்பித்திருக்கின்றார்கள். ஏறத்தாழ 4 மாதங்களாக சிறப்பாக மாணவர்கள் பசியாற சமூக சமையலறை தொடர்ந்து இயங்கி வருகின்றது. (4.7)

# காரைநகர் சிவன் கோவிலில் திருவெம்பாவை ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்து சிதம்பர வருடாந்த திருவெம்பாவை உற்சவத்திற்குரிய சகல ஆயத்த பணிகளும் பூர்த்தியடைந்துள்ளதாக காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்வருட திருவெம்பாவை உற்சவத்தினை சிறப்பாக முன்னெடுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் காரைநகர் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் இவ்வருட திருவெம்பாவை உற்சவத்தினை சிறப்பாக முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் கலந்து கொண்டிருந்த நிலையில் போக்குவரத்து நேர ஒழுங்கமைப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு நீர் மற்றும் திண்மக்கழிவகற்றல் விடயங்களை பிரதேச சபை பொறுப்பேற்பதாகவும் பாதுகாப்பு மற்றும் வீதி ஒழுங்குபடுத்தலை பொலிஸார் மேற்கொள்வது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து ஈழத்து சிதம்பர திருவெம்பா உற்சவத்தை காண்பதற்கு வெளிநாட்டவர்கள் வருகை தந்த வண்ணமே உள்ளார்கள் எனவே இந்த வருட உற்சவம் மிகவும் சிறப்பாக இடம் பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழுங்குங்கள் எனவும் தெரிவித்தார். (4.7)

# முதல்வர் கிண்ண சதுரங்க போட்டிகள்

யாழ் மாநகர சபையினால் நடத்தப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்ட முதல்வர் கிண்ண சதுரங்க சுற்றுப் போட்டியினை மீள உரிய முறையில் சிறப்பாக ஒழுங்குபடுத்தி நடத்துவதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் இப்போட்டியில் பங்கெடுப்பதற்காக விண்ணப்பித்த போட்டியாளர்களின் பட்டியலில் ஏற்பட்டுள்ள தவறுகளை சீர்செய்து பட்டியலினை இறுதிப்படுத்தும் பணிகளினை முதற்கட்டமாக யாழ். மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

அதன் அடிப்படையில் இப்போட்டியில் பங்கெடுத்த போட்டியாளர்களை தங்களது விபரங்களினை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த பட்டியலானது, யாழ். மாநகரசபையின் யாழ்ப்பாணப் பொது நூலகம், நல்லூர் நூலகம், குருநகர் நூலகம், வண்ணார்பண்ணை நூலகம் நாவாந்துறை நூலகம், யாழ்.மாநகரசபையின் செயலாளர் பகுதி ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முதல்வர் கிண்ண சதுரங்க போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் தங்களது விபரங்களை சரிபார்த்து 27 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

மேற்குறித்த இடங்களில் பார்வையிட முடியாத தூர இடங்களில் இருந்து போட்டியில் பங்கெடுத்த போட்டியாளர்கள் தங்கள் பெயர் விபரங்களை சரி பார்ப்பதற்கு 075 658 2556 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தங்களுடைய மின்னஞ்சல் முகவரி அல்லது வட்சப் (Whatsapp) இலக்கம் ஆகியவற்றுடன் எந்த வயதுப் பிரிவிற்குரிய பட்டியல் தேவை என்ற விபரங்களினை அனுப்பி வைத்தால் உரிய பட்டியல் அனுப்பிவைக்கப்படும்.

27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் வரும் திருத்தங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் ஒவ்வொரு போட்டியாளர்களுக்கும் தங்களுடைய பிறந்த திகதி மற்றும் போட்டி விபரங்கள் தொடர்பில் அறிவிக்க கூடிய வட்சப் (Whatsapp) இலக்கம் ஆகியவற்றினை கட்டாயம் குறிப்பிடவும்.

ஏற்கனவே விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கு மேலதிகமாக புதிய போட்டியாளர்கள் இச் சுற்றுப்போட்டியில் எக்காரணம் கொண்டும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

இச் சுற்றுப்போட்டி தொடர்பான விபரங்களினை போட்டியாளர்கள் தொடர்ந்து அறிந்து கொள்ளும் பொருட்டு இச் சுற்றுப் போட்டியில் பங்கெடுக்கும் ஒவ்வொரு போட்டியாளர்களும் 075 658 2556 எனும் வட்சப் இலக்கத்திற்கு குழுவில் இணைத்துக் கொள்ளுமாறு குறுஞ் செய்தி அனுப்புவதன் மூலம் எம்மால் தரப்படும் வ்டசப் இணைப்பினூடாக Jmc Mayor Cup எனும் குழுவில் இணைந்து கொள்ள முடியும்.

முதல்வர் கிண்ணச் சுற்றுப் தொடர்பான விபரங்கள் மற்றும் போட்டியாளர்கள் யார் யாருடன் போட்டியிடப் போகின்றார்கள் என்ற விபரங்கள் அனைத்தும் யாழ் மாநகர சபையால் இக் குழுமத்திலேயே தொடர்ந்து இயற்றப்படும் என யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் அறிவித்துள்ளார். (4.7)

# உதயபுரம் பகுதியில் படகிற்கு தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் படகிற்கு தீ வைத்து எரியூட்டப்பட்டது.

இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் படகிற்கு தீ வைத்ததுடன் மீன்பிடி உபகரணங்களையும் வாளினால் வெட்டி சேதப்படுத்தியிருந்தனர்.

சேதப்படுத்திய காட்சி அங்குள்ள வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4.7.33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி வீதிக்கு பெயரிடல்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள நெடுங்கேணி கிராமத்தின் **"பொதுநோக்கு மண்டப வீதியை"** மக்களின் வேண்டுகோளிற்கிணங்க 30.11.2022 ஆம் திகதிய VNPS/2022/GM/11/56/09 ஆம் இலக்க சபை தீர்மானம் மூலம் **"தம்பிமுத்து வீதி"** எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு சபை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்பெயர் மாற்றம் தொடர்பில் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் "தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபை, முல்லை வீதி, நெடுங்கேணி என்ற முகவரிக்கு 07 வேலை நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரியப்படுத்தவும். ஆட்சேபனைகள் எவையும் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் **"தம்பிமுத்து வீதி"** எனப்பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதனை தெரியப்படுத்துகின்றோம்.

**த.பார்த்தீபன்**
**கௌரவ தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**
(சி-5596)


# போலியான கால்நடை மருத்துவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானம்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கு சட்டவிரோதமான முறையில் சிகிச்சை மேற்கொள்ளும் போலி கால் நடை மருத்துவர்கள் தொடர் பில் எச்சரிக்கையாக இருக்கு மாறு வடக்கு மாகாண விவ சாய அமைச்சின் செய லாளர் ஆ.சிவபாலசுந்தரன் தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்க ளுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந் தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவு னியா மாவட்டங்களில் அரச கால்நடை மருத்துவர் எனும் பெயரில் போலியான நபர்கள் கால்நடைகளுக்கும் வீட்டுப் பிராணிகளுக்கும் சட்டவிரோ தமாக சிகிச்சைகளை மேற்கொண்டு பெருமளவு நிதி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மேற்கொள்ளப் படும் தவறான சிகிச்சைகளால் பெறுமதி மிக்க கால்நடைகள் பெருமளவில் இறந்துள்ளதாக அந்த மாவட்டங்க ளின் பண்ணையாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வடக்கு மாகாண விவசாய அமைச்சிற் கும் கால்நடை உற்பத்திச் சுகா தாரத் திணைக்கள மாவட்ட அலுவலகங்களுக்கும் முறைப் பாடுகளை மேற்கொணடுள்ள னர்.

போலி கால்நடை மருத்து வர்கள் தொடர்பாக பொது மக் கள் அவதானமாக இருப்பதுடன் குறித்த போலி நபர்களால் ஏமா ற்றப்பட்டு ஏற்கனவே தமது கால்நடைகளையும் நிதியை யும் இழந் தவர்களும் தற்போது அவ்வாறான வர்களது தக்வல்களை அறிந்தவர்களும் அவர்கள் தொடர்பான விபரங்களை உட னடியாக செயலாளர், வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு தெரியப்படுத் துமாறு அதில் கூறப்பட்டுள்ளது. (6)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டு கொண்டு இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம்: 24.12.2022 சனிக்கிழமை தொடக்கம் 30.12.2022 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

**தலைமை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்**
**(தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)**

**அறிமுகவுரை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி R.விமலா அவர்கள் (இந்தியா)**
பயிற்சிகளை வழங்குபவர்கள்: துணைபேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன்
துணைபேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

பாடசாலை விடுமுறைக்காலமாகிய இந்த காலப்பகுதியில் மாணவச்செல்வங்களுக்கும் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கும் ஓர் அரியவாய்ப்பு. உங்களுக்காக காலை முதல் மதியம் வரை பயிற்சிகள் வழங்குவதற்கு அறிவுத்திருக்கோவில் தயாராகவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் (சி-5595)
இல.81, பிறவுன் வீதி,கொக்குவில் கிழக்கு,கொக்குவில்,யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745




ஜேர்மனி நாட்டின் பீ.எம்.சட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் -வேள்ட் விஷன் லங்கா நிறுவனம் ஊடாக சாவகச்சேரி நகரச்சபை எல்லைக்குள் பின்லா செயற்றிட்டத்தின் கீழ் 22மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட மீள் சுழற்சி மையம் மற்றும் பொருட்கள் சேகரிப்பு நிலையம் ஆகியன கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

(படம்- சுபேசன்)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 300 |
| தக்காளி | 220 | 280 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 200 | 160 |
| கோவா | 150 | 180 | 180 | 200 |
| கரட் | 200 | 350 | 350 | 400 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 |
| புடோல் | 200 | 240 | 180 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 650 | 900 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 450 | 450 | 700 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 450 | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 400 | 280 | 400 | 450 |
| பீற்றூட் | 450 | 350 | 320 | 450 |
| கறிமிளகாய் | 800 | 750 | 650 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 400 | 450 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 160 |
| தேசிக்காய் | 140 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 350 | — | 350 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 250 | 180 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 40 | 50 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 160 | — | 200 |

# வவுனியாவில் விபத்து இருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, மன்னார் வீதி பட்டானிச்சூர் பகுதியில் ஆடைத் தொழிற்சாலை வாக னம் மற்றும் முச்சக்கரவண்டி மோதுண்டு விபத்துக்குள்ளா னதில் இருவர் காயமடைந்துள் ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருகை யில்

மன்னார் வீதியூடாக வவு னியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஆடைத் தொழி ற்சாலை ஊழியர்களை ஏற்றும் வாகனமும் வவுனியா நகரிலி ருந்து மன்னார் வீதியூடாக பய ணித்த முச்சக்கரவண்டியும் பட்டானிச்சூர் பாடசாலைக்கு அருகே விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வவு னியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், விபத்துக்குள்ளாகிய இரு வாக னங்களும் பகுதியளவில் சேத மடைந்துள்ளன.

சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் விப த்து தொடர்பான மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-250)



நாவலர் சோலை முன்பள்ளி சிறுவர்களுக்கான கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலன்ஸுடன்...

காம்பிகைக்குளம் பகுதியை சேர்ந்த கந்தசாமி சுப்பிரமணியும் என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் பாரஊர்தி கள் சங்க முகாமையாளராக சேவை யாற்றி ஓய்வுபெற்றவர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

விபத்து தொடர்பான விசாரணை களை மாங்குளம் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (4-7,100)

## ஆடு மேய்க்கச்...

சென்றிருந்தபோது நீரில் மூழ்கி அவர் உயிரிழந்தமை கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. வலிப்பு காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (4-7;33,60,104)

## பெருமளவான...

கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் உள்ள 149 பாடசாலைகளுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சோதனைகளின்போது, 1.260 கிலோகிராம் 'மாவா', 9.630 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 2.38 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 207 கிராம் கஞ்சா ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர். இதனுடன் தொடர்பு டைய 47 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். (4-7)

## ஒரு கிலோ...

தாக அகில இலங்கை பேக்கரி உரிமை யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவிக் கையில்,

முட்டையின் விலை அதிகரிப்பு மற் றும் தற்போதுள்ள முட்டை தட்டுப்பாடு காரணமாக கேக்கின் விலை அதிகரித் துள்ளது.

இதேவேளை விலை உயர்வால், பண்டிகைக் காலங்களில் கேக்கின் தேவையும் 25 சதவீதம் குறைந்துள்ள தாகவும் அவர் கூறியுள்ளார். (4-7)

## பேருந்து மோதி...

என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். (4-7,60)

## முல்லையில்...

நடத்திவந்த வணிகர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்த நிலையில் வணிக நிலையத்திற்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் 68 வயதுடைய அமிர்த லிங்கம் தனபாலசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பில் தடய வியல் பொலிஸார் வரவழைக்கப்பட்ட துடன், முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றார்கள். (4-7)

## நிலங்கள்...

விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என தெரிவித்த அவர், தீர்ப்பு சொல்லப்பட்டு வெளியில் வந்தவர்களுக்கு மீண்டும் வழக்கு போடப்படுவதை தடுக்க ஜனாதிபதி முன்வர வேண்டுமென குறிப்பிட்டார்.

காணாமல்போனவர்களுடைய விட யம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தண்டிக் கப்பட வேண்டும் எனவும் அவர் களுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி அரசாங்கம் உறவுகளுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி னார்.

மேலும், தங்களுடைய போராளிகள் இயக்கங்கள் அனைத்தும் உருவாகி யது இந்த நிலத்தை காப்பாற்றுவதற் காக என்பதால், நிலங்கள் விடுவிக்கப் படாதவரைக்கும் போராட்டத்தை என் பது அர்த்தமற்றது என அவர் கூறி னார். (4-7,285)

# மியான்மரிலுள்ள 152 அகதிகள் இலங்கை வர விருப்பம்

(கொழும்பு)

கனடாவிற்கு சட்டவிரோதமாக படகு மூலம் செல்ல முயன்ற நிலை யில், படகு பழுதடைந்து வியட்நாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 302 இலங்கை யர்களில் 152 பேர் இலங்கைக்கு மீண்டும் வர விருப்பம் தெரிவித்துள்ள தாக கூறப்படுகின்றது.

நாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்த 152 பேரும் நாடு திரும்புவதற்கு தேவை யான வசதிகள் செய்து தரப்பட்டுள்ள தாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கோரிக்கைக்கு இணங்க 302 இலங்கையர்களுக்கு உதவியதற்காக ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப் புக்கு அமைச்சர் அலி சப்ரி நன்றி களையும் கூறியுள்ளார்.

அதேவேளை வியட்நாமில் மாட்டிக் கொண்டதை அடுத்து நாடுதிரும்ப மாட் டோம் எனக் கூறி இருவர் தற்கொலை க்கு முயன்ற நிலையில்யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை யான கிரிதரன் உயிரிழந்திருந்தமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## வழக்கைத்...

நீதி அமைச்சில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து ரைக்கையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் மற்றும் விடுதலைப் புலிப் போராளிகள் சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப் படையில் விடுதலை செய்ய விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள 8 விடு தலைப் புலிப் போராளிகள் மீதான குற் றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட் டுள்ளன. இவர்களின் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் கீழ் சிறையில் பல ஆண்டுகாலமாக தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களில் 16 பேரின் வழக்குகளை விரைவாக விசார ணைக்கு எடுத்து, அவற்றை நிறைவு செய்யு மாறு நீதிச் சேவை ஆணைக்குழு விடம் வலியுறுத் தியுள்ளேன்.

சிறைச்சாலைகளில் வயது முதிர்ந்தோர், நோய் வாய்ப்பட்டோர் ஆகியோரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய தீர்மானிக் கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலை களில் உள்ள கைதிகள் ஒவ்வொருவரின் தகவல்களும் தற் போது கோரப் பட்டுள்ளன.

சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் நிய மிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்து ரைக்கு அமைய வயது முதிர்ந்தோர் மற்றும் கொடிய நோய் களினால் பாதிக் கப்பட்டுள்ளவர் கள் எதிர் வரும் சுதந்திர தினத் தன்று விடுதலை செய்யப்படுவார் கள் எனவும் தெரி வித்தார். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1433
வெற்றி இலக்கங்கள்
கடகம் 7 1 4 7 3 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1008
M 15 28 44 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 3220
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 07 18 20 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1326
M 07 05 40 43 67

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 287
மேஷம் 21 28 44 62 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/23
சீட்டிழுப்பு இலக்கம் 4978
G 2 3 3 0 0 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1953 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.12.23 தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,797,420/-
Z 09 22 45 62
ரூ.500/- பரிசுகளுக்கான 3203 ரூ.100/- பரிசுகளுக்கான 307

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.23
சீட்டிழுப்பு இல : 4114
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,690,560/-
வெற்றி இலக்கங்கள்
14 54 60 69 W

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 265
சீட்டிழுப்பு திகதி 2022.12.23
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 08 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,312,980/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,329,753/-
திகதி 2022-12-23
வெற்றி வாரம் 3665
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 19 26 44 46
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,054,720/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 23 10 36 70 74
சீட்டிழுப்பு வாரம் 1129
வர்ணம் ஊதா
திகதி 2022.12.23 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 288,429,509.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1779
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2022.12.23
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,984,640/-
வெற்றி இலக்கங்கள்
24 31 43 63 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

மூளாய்தெற்கு, மூளாயில் 3 அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

(13871)

**075 284 3416**
**077 284 3416**



## ஊர் கோழி குஞ்சுகள்

விறாத்து பருவம்
விற்பனைக்கு

Rani Farm
Reg:-VW/FIN/BR/I/22/2018

சுழிபுரம்

(13864)

**077 332 2433**


# யாழ். நகர் பகுதியில் துவிச்சக்கர வண்டிகளுக்கு கட்டணம் அறவிடப்படாது

யாழ். நகர் பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளுக்கு அறவிடப்பட்டு வந்த கட்டணங்கள் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

யாழ்.நகர் மத்தி பகுதிகளில் உள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்துபவர்களிடமிருந்து வாகன தரிப்பிட கட்டணங்கள் அறவிட ஒப்பந்தக்காரர்களுக்கான ஒப்பந்தம் யாழ்.மாநகர சபையினால் வழங்கப்பட்டு இருந்தது.

வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் என பவற்றுக்கு தரிப்பிடக்கட்டணம் அறவிடப்பட்டு வந்தது.

துவிச்சக்கரவண்டிகளுக்கான தரிப்பிடகட்டணங்களை அறவிட வேண்டாம் என பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக துவிச்சக்கர வண்டிக்கான கட்டணங்கள் அறவீடு செய்வதனை தவிர்க்குமாறு முதல்வரால் ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(4,7,33)


## SB travels and Tours pvt ltd

**தற்போது யாழ்ப்பாணம் - சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவையும் ஆரம்பம்**

Jaffna to Chennai (இருவழி) 61,900/=
Colombo to Chennai (இருவழி) Indigo - 63,000/=
(நிபந்தனைக்குட்பட்டது) விமான பயணச் சீட்டுக்களையும்
Malaysiya, India, Bangkok, Dubai விசாக்களும் பெற்றுத் தரப்படும்.

SB travels and Tours pvt ltd Hotline : 075 555 9932
No.198, Kasthuriyar Road, Jaffna.
021 222 8555, 076 691 1082,83
No.41, Ginthupitiya street, Colombo - 13.
011 233 3322, 076 691 1089
No.324, Aluthmawatha road, Colombo -15.
011 254 0280, 077 108 3481

Email:
sbtravels99@yahoo.com

(C-5591)



## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப் பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல.

(C-5571)

**077 706 7698**



"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

தொழில்நுட்ப கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு

**A/L 2022 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய**

## இலவச கருத்தரங்கு

29,30 Dec. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்,
30,31 Dec. பொறியியல் தொழில்நுட்பம்,
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

'காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை'

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

(C-5593)

**077 017 5346**



## ஜெனரேட்டர் விற்பனைக்கு




இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள 30kv 1500 rpm(220v/400v) ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு.

(13888)

**075 887 5036**



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-5600)

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

**0777-068-777**



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport க்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-5600)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**



## வேலையாள் தேவை

ஈர அரிசி அரைத்து மா வறுத்தல் ஆண், பெண் இருபாலாரும்

சம்பளம்
1,700/= இற்கு மேல்

தொடர்புகளுக்கு

(C-5599)

**077 936 1356**



## வேலையாள் தேவை

மில்லில் வேலை செய்வதற்கு வேலை தெரிந்தவர் அல்லது பழகி வேலை செய்யக்கூடியவர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் - 51,000/= இற்கு மேல்

(C-5599)

**077 936 1356**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 82 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13890)

### தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

**077 986 5457, 077 814 7389**



## Kids Park Elocution Center

## "English Through Feeling"

புதிய ஆண்டுக்கான முன்பள்ளி பிள்ளைகளான 3, 4, 5 வயது பிரிவினர்களுக்கும் தரம் 1 இலிருந்து தரம் 5 வரையான பிள்ளைகளுக்கும் தேவையானஆங்கில திறன்விருத்திப் பயிற்சிக்கான அரிய சந்தர்ப்பம். புதிய பிரிவு எதிர்வரும் 31.12.2022 இலிருந்து அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



புதிய அனுமதிகள் 2023

- தகுதி வாய்ந்த ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பேச்சு மற்றும் எழுத்து ஆற்றலுக்கான பயிற்சி.
- தகுதியான ஆசிரியர்களால் தரமான பயிற்சி சனி ஞாயிறு தினங்களில் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை.

**தரம் 9, 10 மற்றும் க.பொ.த. சா/த. மாணவர்களுக்கான ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கியம் மீட்டல் வகுப்புக்கள்**

பாடநெறி ஆலோசகர் சி.முகுந்தன்
ஆங்கில விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

(13893)

முகவரி: இல.528, பலாலி வீதி, திருநெல்வேலி.
(பரமேஸ்வரா சந்திக்கு அருகில் பந்தி உணவகப் பக்கமாக)
தொ.பே. 0777 880 330, 0757 880 336


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.